**<u>சார்பு நீதிமன்றம், அரூர்</u>**

**<u>நாள் – 18.08.2025</u>**

**OS.110/2022**

**வா.சா.1 திருமதி.வசந்தி**

**வா.சா.1 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டார்.**

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. நான் இந்த வழக்கை எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் என்னிடம் பிரதிவாதி 2 இலட்சம் பணம் வாங்கியிருந்தார் அந்த தொகையை வட்டியுடன் திரும்ப கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். பிரதிவாதி அருண்குமார் எனக்கு நன்கு தெரிந்தவர் என்றால் சரிதான். பிரதிவாதி அருண்குமார் எனது உறவினரா என்றால் ஆமாம். பிரதிவாதி அருண்குமார் ஒரு கார் ஓட்டுனர் என்றால் சரியல்ல, அவர் கூட்டுறவு சொசைட்டியில் சரக்கு போடும் வேலையை தற்காலிகமாக செய்து வருகிறார். மேற்படி பிரதிவாதி அருண்குமார் கூட்டுறவு சொசைட்டியில் சரக்குபோடும் வேலையை தற்காலிக மாக செய்து வருகிறார் என்று என்னுடைய பிராது மற்றும் முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி அருண்குமார் கார் ஓட்டுனர் அதனால் அவரை ஆக்டிங்டிரைவர் பணிக்கு அவ்வ்போது நாங்கள் அமர்த்தி வந்தோம் என்றால் இல்லை.

2. நான் இந்த வழக்கு நடவடிக்கைக்கு முன்பு எப்போதாவது பணம் கொடுக்கல் வாங்கல் இருந்ததா என்றால் அவ்வப்போது பணம் வாங்குவார் திரும்பி செலுத்திவிடுவார். நான் ஏலச்சீட்டு நடத்தியதாக சொல்லப்படுவது

உண்மையா என்றால் இல்லை. பிரதிவாதி எந்த தேதியில் புரோநோட் அடிப்படையில் கடன் வாங்கினார் என்றால் 07.03.2021 ம் தேதி. அந்த புரோநோட்டில் அந்த இடத்திலேயே கையெழுத்து வாங்கினேன் என்றால் சரிதான். அது எந்த இடம் என்றால் எங்கள் வீட்டில்தான். அந்த சமயத்தில் யார் யார் இருந்தார்கள் என்றால் பிரதிவாதி அருண்குமார், அவரது அப்பா வந்திருந்தார், சாட்சிகள் அசோகன், குமார் ஆகியோர் வந்திருந்தார்கள். எழுதியவர் கௌரி என்பவர் அங்கு இருந்தார்.

3. கௌரி என்பவர் பத்திரம் எழுதுபவரா என்றால் இல்லை, அவரை பிரதிவாதி தான் அழைத்து வந்தார். அந்த 4 பேரும் எனக்கும் பிரதிவாதிக்கும் தெரிந்த நபர்கள் என்றால் சரிதான். எவ்வளவு பணம் கொடுத்தேன் என்றால் ரூ.2,00,000/– ரொக்கமாக கொடுத்தேன். நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் விவசாயம் செய்து வருகிறேன். நான் வருமான வரி செலுத்தி வருகிறேனா என்றால் இல்லை. ரூ.2,00,000/–த்தையும் நான் ரொக்கமாக தான் கொடுத்தேன் வங்கி பரிவர்தனை எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். ரூ.50,000/–க்கு மேல்வங்கி பரிவர்தனையாக தான் செய்யவேண்டும் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும், நான் விவசாயம் செய்து வருகிறேன். நான் வங்கி பரிவர்தனை மூலமாக பிரதிவாதிக்கு பணம் கொடுக்கவில்லை, ரொக்கமாக கொடுத்தேன் என்றால் சரிதான்.

4. எனக்கு வங்கி கணக்கு உள்ளதா என்றால் உள்ளது. அது எந்த வங்கியில் உள்ளது என்றால் இந்தியன் வங்கி, அரூர். அந்த வங்கி கணக்கில்

இருந்து தான் நான் பணத்தை எடுத்துக்கொடுத்தேன் என்றால் இல்லை, நான் கையில் வைத்திருந்த பணத்தை தான் கொடுத்தேன். புரோநோட் கொடுக்கும்போது வேறு ஏதாவது நிபந்தனை விதித்தேனா என்றால் 6 மாதத்தில் பணத்தை திரும்ப கொடுப்பதாக சொல்லிதான் வாங்கினார். 6 மாதம் கழித்து பணத்தை பிரதிவாதி திருப்பி கொடுத்துவிட்டார் என்றால் இல்லை. பணத்தையும் பிரதிவாதி திருப்பி செலுத்திவிட்டு பூர்த்திசெய்யாத புரோநோட்டை என்னிடம் திரும்பக் கேட்டார் என்றால் இல்லை. அவர் மீண்டும் மீண்டும் பொதுவர்கள் முன்னிலையில் புரோநோட்டை திரும்ப கேட்டார் அதனை நான் திரும்பி கொடுக்கிறேன் என்று சொல்லி ஒத்துக்கொண்டேன் என்றால் இல்லை.

5. நான் ஒரு ஏலச்சீட்டு நடத்தினேன் அதில் பிரதிவாதி உறுப்பினர், அவர் சீட்டுத்தொகையை எடுத்துவிட்டார், பின்னிட்டு அவர் செலுத்தவேண்டிய சீட்டு தொகையையும் செலுத்திவிட்டார், அதை மறைத்து நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பின்னிட்டு எனக்கும் பிரதிவாதிக்கும் ஒரு மனக்கசப்பு ஏற்பட்டது என்றால் இல்லை. அந்த மனக்கசப்பை காரணமாக வைத்துதான் பிரதிவாதிக்கு தெரியாமல் புரோநோட்டை பிரதிவாதியின் கையெழுத்து இட்டு வாங்கி இந்த பொய்யான வழக்கை நான் பிரதிவாதி மீது தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

R VIJAYAN

Digitally signed by R VIJAYAN
Date: 2025.08.18 17:12:24 +0530